**இலக்கியம் முன்னோட்டத் தேர்வு 2024**
**விடைப்பட்டி**

**SKEMA KESUSASTERAAN TAMIL PERCUBAAN 2024**

| கேள்வி எண் | விடைகள் | புள்ளி |
|---|---|---|
| 1 | அறிவு | 2 |
| 2 | சொல்நயம்<br>• ஈனவழி<br>• மெய் வண்ணம் பூசி<br>• ஊனவிழி<br>• ஞானவழி | 2 |
| 3 | i) தவறான கண்ணோட்டம்<br>ii) இவ்வடிகளின்வழி மனித மனம் நல்லவர்கள் காட்டும் உயரிய வழியைப் பின்ற்றி நடக்க வேண்டுமெனக் கவிஞர் கூறுகிறார். | 2<br>3 |
| 4 | நாடகங்கள்/காவியங்கள்/கவிதை நூல்கள்/கட்டுரை நூல்கள்/இசைப்பாடல் தொகுப்புகள்/புதினம் | 2 |
| 5 | i) புலவர் பிசிராந்தையார், புலவர் மேற்படியார், புலவர் க<br>ii) புலவர் சமுதாயம்/ ஆள்வோர் சமுதாயம்/ஆளப்படுவோர் சமுதாயம் | 2<br>2 |
| 6 | i. முன் எச்சரிக்கை உடையவள், செய்நன்றி மறவாதவள்<br>ii. தோப்பு/சோலை<br>iii. பச்சைகிளி சேற்றைக் கழுவ குளத்தில் குளிக்கும் போது கரடி வந்து விட்டதால் கூடவிளையாடிய இருந்த சிறுமிகள்/தோழிகள் காப்பாற்றாமல் ஓடிய போது தனியாக குளத்தில் தவித்தாள்.<br>iv. கண்ணாமூச்சி விளையாட்டில் மாலையானதும் அனைவரும் அவர் அவர் வீட்டுக்குச் சென்றுவிட வேண்டும் எனக் கொன்றை கூற அதற்குப் பச்சைக்கிளி சிறுமியாக இருந்த போது கண்ணாமூச்சி விளையாட்டில் தோழியர் யாவரும் தன்னைத் தனியாக குளத்தில் தவிக்க விட்டுச் சென்றதையும் அப்போது தூயன் வந்து காப்பாற்றியதயும் நினைவு கூர்ந்து யாரும் போகாமல் புன்னை மரத்தடியில் காத்திருந்து அனைவரும் ஒன்றாக செல்ல தங்கம் ஆலோசனை கூறுகிறாள். | 2<br>2<br>2<br><br><br>3 |
| 7. | திருவேங்கடம் | 2 |
| 8. | i) தானப்பன்/சுடர்விழி/மனோன்மணி/மோகனா<br>(குழந்தைவேலைத் தவிர மற்ற அனைத்து கதைப்பாத்திரங்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.<br>ii) காலை நேரம்/மாலை நேரம்/இரவு நேரம்/ஆடிமாதம்/வெயில் காலம்/ஆனி மாதம் | 2<br><br><br>2 |
| 9 | i) சுடர்விழியின் பண்புநலன்கள்<br>- பெரியோரை மதிப்பவள் | 2 |

| | | |
|---|---|---|
| | - பிறருக்கு அடங்கி நடப்பவள்<br>- கணவரின் கொள்கைகளைப் போற்றுபவள்<br>- எளிய வாழ்க்கையை விரும்புவள்<br>(ஏதேனும் இரண்டு)<br><br>ii) மொழிநடை<br>- பேச்சுவழக்கு<br><br>iii) சித்தி கடுமையாக நடந்து கொண்டாலும் அவளுக்கு அடங்கி நடக்க வேண்டுமெனக் குழந்தைவேலின் தாய் கூறியதைக் அன்று கேட்டு நடந்து கொண்டதால்தான் சுடர்விழி திருமணமானபின் கணவரின் விருப்பபடி வாழ்ந்து குடும்பத்தை அன்பாக வழிநடத்த முடிகிறது.<br><br>iv) தானப்பனின் திருமணம் முடிந்த பின் குழந்தவேல் தன் வீட்டில் வைக்க முடியாத நிலை ஏற்பட்டது. மணமக்களுக்குத் தாய் வீட்டில் விருந்து வைக்க தாய் வீட்டுக்கு வருகிறான். அவ்வேளையில் சுடர்விழி தான் ஊருக்குப் போவதாகக் கூறுகிறாள். விருந்து முடிந்து போகுமாறு குழந்தைவேலும், அவனின் தாயும் வற்புறுத்துகிறார்கள்.<br><br>- ஏற்புடைய விடைகள் | <br><br><br><br><br><br>2<br><br>2<br><br><br><br><br>3 |
| 10 | **முன்னுரை**<br>**கவிஞர் : வா**ணிதாசன்<br>**தலைப்பு :** காலை அழகு<br>**பாடுபொருள் :** இயற்கை<br>**மையக்கரு :** காலைப் பொழுதின் அழகு<br><br>**கண்ணி 1**<br>பொழுது விடியும் வேளையில் சுக்கிரனின் (வெள்ளி) ஒளியுடன் வானம் அழகாக காட்சியளிக்கின்றது. பறவைகள் எழுப்பும் ஒலி காலை அழகுக்கு மெருகூட்டுகிறது.<br><br>**கண்ணி 2**<br>காலை நேர இயற்கைக் காட்சிகள் கண்களுக்கு விருந்தாக உள்ளன. விடியலினால் சோலையில் ஏற்படும் ஆரவாரங்கள் மனத்திற்கு இன்பத்தைச் சேர்க்கின்றது.<br><br>**கண்ணி 3**<br>வேவல் கூவும் அழகு எண்ணத்தை ஈர்க்கின்றது. இயற்கையை விருப்பு வெறுப்பு இன்றி அணுகினால் வாழ்க்கை இன்பமாக இருக்கும்.<br><br>**கண்ணி 4**<br>தாமரை மொட்டின் உள்ளே அழகு மறைந்திருக்கிறது. சூரிய ஒளிபட்டுத் தாமரை மொட்டுகள் மலரும்போது அதன் அழகு வெளிப்பட்டு மனக்கலக்கத்தைப் போக்குகிறது. | 2<br><br><br><br><br><br><br><br><br><br><br><br><br>15 |

| | | |
|---|---|---|
| | **கண்ணி 5**<br>காலையில் வீட்டைச் சுத்தம் செய்யும் பெண்களின் முகங்கள் பொலிவாகக் காணப்படுகின்றன. அம்முகங்களைக் கண்டு வானில் உலவும் நிலவும் கூட வெட்கப்பட்டு மறைகிறது.<br><br>**முடிவு** : ஏற்புடைய விடை | 2<br>மொழி<br>1 |
| 11. | i) **அணிநயம்**<br>**கருத்து விளக்கம்**<br>அ. அணிநயத்தை எழுதுதல்<br>ஆ. அணியின் பொருள் விளக்கம்<br>இ. எடுத்துக்காட்டு<br>ஈ. எடுத்துக்காட்டினை விளக்குதல்<br><br>திரிபு அணி<br>• குருட்டு – திருட்டு<br>• தாவும் – மேவும்<br>பின்வருநிலை அணி<br>• உலகமடா – உலகமடா<br>உருவக அணி<br>• மருந்து – வழிகாட்டல்/ தீர்வு<br>• அன்பு படர்ந்த மொம்பினிலே – அன்பு கொண்ட உள்ளம்<br>• அகந்தை குரங்கு – ஆணவம்<br>• கொம்பு ஒடிந்த – உள்ளம் நொந்து<br>• கொடியும் குழைந்து – வாழ்க்கை சீரழிந்து<br>தன்மை நவிற்சி அணி<br>• விளையும் பயிரை வளரும் கொடியை வேருடன் அறுத்து விளையாடும்<br>சுவை அணி<br>• குறுக்கு வழியில் வாழ்வு தேடிடும் குருட்டு உலகமடா<br>(கவிதையில் உணர்வுகளை எற்படுத்தும் அடிகளைச் சான்றாகக் கொள்ளலாம்)<br><br>(ஏதெனும் 3 அணிநயங்களை விளக்கி எழுதி இருக்க வேண்டும்) முன்னுரை/முடிவுரை தேவையில்லை.<br><br>**ii) படிப்பினை - படிப்பினை + விளக்கம் + வலியுறுத்தல்**<br>1. பிறரை ஏமாற்றி வாழக்கூடாது.<br>2. நற்சிந்தனையோடு வாழும் வாழ்வே உயர்ந்தது.<br>3. சண்டை சச்சரவுகளைத் தவிர்த்தல் நலம்.<br>4. வாழ்க்கையில் முன்னேற விரும்புபவர்களைக் கைக்கொடுத்துத் | 10 பு<br>(3x3 = 9<br>+1 மொழி<br><br><br><br>10 பு<br>(3x3 = 9<br>+1 மொழி |

| | | |
|---|---|---|
| | தூக்கிவிட வேண்டும்.<br><br>5. எளியவர்களை ஆதரிக்க வேண்டும்.<br><br>6. உழைத்து வாழ வேண்டும்.<br><br>(ஏதெனும் 3 படிப்பினைகளை விளக்கி எழுதி இருக்க வேண்டும்)<br>முன்னுரை/முடிவுரை தேவையில்லை. | |
| 12. | முன்னுரை: பிசிராந்தையர் நாடகம்,பாவேந்தர்<br>பாரதிதாசன்,கருப்பொருள்அறமும் உயர் நட்பும்,வினாவை ஒட்டிய வரி<br><br>பண்பு நலன்கள்<br>1.நட்பைப் போற்றுபவர்:<br>• தன் பேரனுக்குக் கோப்பெருஞ்சோழன் எனப் பெயரிட்டார்<br>• பிசிராந்தையாரும் கோப்பெருஞ்சோழனும் ஒருவரை ஒருவர் கண்டதில்லை,பேசியதில்லை.<br>• இளங்கோச் சோழன் தன் தந்தைக்கு எதிராகப் படையெடுக்கும் செயலைக் கண்டு மனம் வருந்துகிறார்<br>• சோழனோடு வடக்கில் உண்ணா நோன்பிருந்து உயிர் துறக்கிறார்.<br>2. உதவும் மனப்பான்மை கொண்டவர்<br>• தன் மார்பில் தொங்கிய கல்லிழைத்த பதக்கத் தொங்கலைக் கழற்றி மேற்படியாரிடம் கொடுத்து மனைவி மக்களின் பசியைப் போக்குமாறு வேண்டினார்.<br>• புயல் காற்றைப் பற்றி மக்களை எச்சரிக்கிறார்.<br>• புயல் மாழையால் மக்கள் அடைந்த துன்பத்தைப் பார்வையிடுவதற்கு மன்னனோடு தானும் (பிசிராந்தையாரும்),மேற்படியாரும் செல்வது ஆகும்.<br>• உடையப்பனுக்கு குளத்தில் இருந்து பெட்டியை இழுக்க உதவி செய்கின்றார்.<br>• பச்சைக்கிளியைக் கொலை செய்தவரைக் கண்டுபிடிக்க மன்னனுக்கு உதவுதல். இறந்த பெண்ணின் அடையாளத்தைக் கண்டறிய இறந்த பெண்ணைப் போல் மரப்பொம்மை செய்ய தச்சனை அழைக்கிறார்.<br>3.அன்புள்ளம் கொண்டவர்.<br>• கோப்பெருஞ்சோழன் மீது கொண்ட அன்பால் தன் பேரனுக்கு அதே பெயரைச் சூட்டுகிறார்.<br>• கோப்பெருஞ்சோழனைக் காணாமலே ஆழ்ந்த அன்பு கொள்கிறார்.<br>• அறிவுடை நம்பி மீது ஆழ்ந்த அன்பினால் மன்னன் இறந்தால் தானும் இறப்பதாகக் கூறுகிறார்.<br>• புயல் மழை காரணமாக மக்களின் நிலை அறிய மன்னனுடன் செல்கிறார்.<br>4.சமுதாயத்தில் பல தரப்பட்ட மனிதர்கள் இருப்பது மக்களை வலிமையாக்கும் என்ற சிந்தனை உள்ளவர்.<br>• ஒரு நாட்டில் எல்லாரும் செல்வராக இருந்தால் தொல்லைகள் இல்லை. ஆனால், மக்கள் மன மகிழ்ச்சியுடன் வாழ மாட்டார்கள். ஆகவே, மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ வேண்டுமானால் நாட்டில் | முன்னுரை<br>2<br><br>கருத்து<br>(5x3=15)<br><br>3<br><br>3<br><br>3 |

| | | |
|---|---|---|
| | ஏழைகளும் இருக்க வேண்டும் என்று கூறுகிறார்.<br>• எல்லாரும் செல்வராக இருந்தால் மக்கள் மரப்பொம்மைகள் போன்று உணர்ச்சியற்றவராக இருப்பார்கள் என்று கூறுகிறார்.<br>• அனைவரும் நல்லவராக இருந்தால் மக்கள் மனம் மென்மை அடைந்துவிடும். இதனால், இயற்கையாலும், பகைவர்களாலும் ஏற்படும் துன்பத்தைத் தாங்கிக் கொள்ள மனவலிமை இல்லாமல் போய்விடும் எனக் கூறுகிறார்.<br>• ஒரு நாட்டில் தீயவரும், வறியவரும் இருந்தால்தான் மக்களுக்கு என்ன தேவை என்று ஆள்வோர் அறிந்து கொள்ளலாம் என்கின்றார்.<br>5. மக்கள் தங்களைக் தாங்களே தற்காத்துக் கொள்ளும் பக்குவம் வேண்டும் எனும் எண்ணம் கொண்டவர்.<br>• தன்னைத் தற்காத்துக் கொள்ளும் ஆற்றல் ஒவ்வொரு மனிதருக்கும் தேவை என்று கூறுகிறார்.<br>• பச்சைக்கிளி தன்னைத் தற்காத்துக் கொள்ள ஆற்றல் இல்லாதவளாக இருந்ததால் கொலை செய்யப்பட்டாள் என்கின்றார்.<br>6.நகைச்சுவை உணர்வு மிக்கவர்.<br>• மேற்படியாரைக் கீழ்ப்படியார் என்று சொல்லி நகைச்சுவையாகப் பேசுகிறார்.<br>• கடும் காற்று மழையில் மேற்படியாரின் நிலை குறித்து வேடிக்கையாகப் பேசி சிரிக்கிறார்.<br>6. மதிநுட்பம் கொண்டவர்.<br>• தச்சுப்புலவரைக் கொண்டு பச்சைக் கிளியின் பிணத்தைப் அச்செடுக்கச் செய்யச் சொல்கிறார்.<br><br>முடிவுரை: சிறந்த பண்புநலன்களைப் பெற்றவர்<br>நம் வாழ்வில் போற்றி வாழ்வோம்<br><br>**குறிப்பு:** ஒரு சம்பவம் அல்லது இரு சம்பவங்களை விரிவாக எழுத வேண்டும்.ஒவ்வொரு கருத்துக்கும் இறுதியில் வலியுறுத்தும் வாக்கியம் எழுதிருக்க வேண்டும். | 3<br><br>3<br><br>3<br><br>3<br><br>முடிவுரை 2<br>மொழி 1 |
| 13 | முன்னுரை: பிசிராந்தையர் நாடகம்,பாவேந்தர் பாரதிதாசன்,கருப்பொருள்அறமும் உயர் நட்பும்,வினாவை ஒட்டிய வரி<br><br>1.நட்பைப் போற்றுதல்<br>• தன் பேரனுக்குக் கோப்பெருஞ்சோழன் எனப் பெயரிட்டார்<br>• பிசிராந்தையாரும் கோப்பெருஞ்சோழனும் ஒருவரை ஒருவர் கண்டதில்லை,பேசியதில்லை.<br>• இளங்கோச் சோழன் தன் தந்தைக்கு எதிராகப் படையெடுக்கும் செயலைக் கண்டு மனம் வருந்துகிறார்<br>• சோழனோடு வடக்கில் உண்ணா நோன்பிருந்து உயிர் துறக்கிறார்.<br>2.உதவும் மனப்பான்மை.<br>• தன் மார்பில் தொங்கிய கல்லிழைத்த பதக்கத் தொங்கலைக் கழற்றி | முன்னுரை<br>2 புள்ளி<br><br>கருத்து<br>(5x3=15)<br><br>3 |

| | | |
|---|---|---|
| | மேற்படியாரிடம் கொடுத்து மனைவி மக்களின் பசியைப் போக்குமாறு வேண்டினார்.<br>• புயல் காற்றைப் பற்றி மக்களை எச்சரிக்கிறார்.<br>• புயல் மாழையால் மக்கள் அடைந்த துன்பத்தைப் பார்வையிடுவதற்கு மன்னனோடு தானும் (பிசிராந்தையாரும்),மேற்படியாரும் செல்வது ஆகும்.<br>• உடையப்பனுக்குப் குளத்தில் இருந்து பெட்டியை இழுக்க உதவி செய்கின்றார்.<br>• பச்சைக்கிளியைக் கொலை செய்தவரைக் கண்டுபிடிக்க மன்னனுக்கு உதவுதல். இறந்த பெண்ணின் அடையாளத்தைக் கண்டறிய இறந்த பெண்ணைப் போல் மரப்பொம்மை செய்ய தச்சனை அழைக்கிறார்.<br>3.நீதியை நிலைநாட்டுதல்.<br>• பாண்டிய மன்னன் பச்சைக் கிளியைக் கொன்றவனை கண்டுபிடிக்கும்படி அமைச்சனுக்குக் கட்டளை இடுதல். அமைச்சனால் கண்டுபிடிக்க இயலா விட்டால் அமைச்சனுக்கும் தூக்கு என்றும், தானும் மடிவதாக கூறுதல்.<br>• பாண்டிய நாட்டு அமைச்சன் மூன்று நாளிகளில் பச்சைக்கிளியைக் கொன்றவரைக் கண்டுபிடிக்க இயலவிட்டால் மடிவேன் எனக் கூறுதல்<br>• தூயனும் மான்வளவனும் தாங்களே குற்றவாளி எனக் கூறினாலும் நேரில் பார்த்த சாட்சிகள் இல்லாததால் அதனை நன்கு ஆராய்ந்து குற்றவாளிகளைத் தண்டிக்காமல் விடுதல்.<br>• கோப்பெருஞ்சோழன் தன் நாட்டுப் படைத்தலைவன் பரூஉத்தலையாரும் தன் புதல்வர்கள் செங்கோச் சோழனும் இளங்கோச் சோழனும் தனக்கு எதிராகச் செயல் பட்ட போது அவர்களைச் சிறையில் அடைக்குமாறு கட்டளை இடுதல்.<br>4.நேர்மையான ஆட்சி முறை.<br>• பாண்டிய மன்னன் அறிவுடை நம்பி தம் மக்களை நல்லவர்களாகவும் செல்வந்தராகவும் வாழச் செய்தல்.<br>• ஆராய்ச்சி மணி (அபாய) ஒலி கேட்டவுடன் மக்களைக் காக்க செல்லுதல்<br>• பச்சைக்கிளியின் கொலைவழக்கை தீர ஆராய்தல்.<br>• நாட்டு மக்களைத் தன்னம்பிக்கை உடையவர்களாகவும் சிக்கலை எதிர்த்துப் போராடக்கூடிய மனப்பக்குவம் உடையவர்களாகவும் பழக்காததால் பிசிராந்தயார்,அரசன்,மன்னி அனைவருமே தங்களையே குற்றவாளியாக நினைத்தல்.<br>• சோழமன்னன் கோப்பெருஞ்சோழன் தன் நாட்டைச் சேர்ந்த தூயனால்தான் பாண்டிய மன்ன்ன்<br>5.மக்களின் மனவலிமையே நாட்டின் பலம்<br>• மக்கள் நல்லவராகவும் செல்வராகவும் இருந்தால் போதாது. அவர்கள் மனவலிமை பெற்றிருக்க வேண்டும் என்பதை பச்சைக்கிளியின் கொலைவழக்கின் மூலம் அறிதல்.<br>• பச்சைக்கிளியின் கொலை உண்டதை பறைமுழக்குவோன் கூறியதை கேட்ட மாத்திரத்திலேயே பெண் ஒருத்தி உயிரை விடுதல். | 3<br><br>3<br><br>3 |

| | | |
|---|---|---|
| | • நாட்டு மக்களில் தங்களைத் தாங்களே கொலை செய்ததாகக் கூற முன் வருதல்<br>• பச்சைக்கிளியின் உடலைப் பார்த்து பாண்டிய நாட்டு மன்னியும் அழுதல். | |
| | 6.பழிக்கும் இகழ்ச்சிக்கும் அஞ்சுதல்.<br>• பாண்டிய மன்னன் அறிவுடை நம்பி பச்சைக்கிளி கொலையுண்ட சதி அறிந்து மனம் பதறுகிறார்.<br>• மக்கள் தன் ஆட்சியைக் குறை கூற வாய்ப்பு ஏற்பட்டுவிடுமோ என அஞ்சுகிறார்.<br>• தன்னை எதிர்த்த பிள்ளைகளையே கொல்ல நினைத்த கோப்பெருஞ்சோழனை அறவுரை கூறி புல்லாற்றூர் எயிற்றியனார் தடுத்தல். கோப்பெருஞ்சோழனுக்கு வரப்போகும் பழியையும் பாவத்தையும் முளையிலே கிள்ளி எரிதல்.<br>• பழியும் பாவமும் ஏற்படாமல் இருக்க சோழ மன்னன் வடக்கிருந்து உயிர் நீத்தல் | 3 |
| | 7. ஆள்வோர், ஆளப்படுவோர் அன்பு.<br>• பிசிராந்தையார் கோப்பெருஞ்சோழனின் மீது வைத்த அன்பு-பாடல்,பேரன்,வடக்கிருத்தல்<br>• பிசிராந்தையார் மேற்படியார் மீது வைத்த உதவிக்கு அன்பே அடிப்படை<br>• புலவர் பொத்தியார் மன்னனின் மீது உள்ள அன்பினால் வடக்கிருத்தல்<br>• வஞ்சக போரில் சோழ ஈடுபடவில்லை என உணர்ந்த பாண்டிய மன்னன் | 3 |
| | 8.காணாமல் கண்ட நட்பு<br>• பிசிராந்தயார் கோப்பெருஞ்சோழனைக் காணாமலேயே அவன் மீது கொண்ட அன்பினால் பல பாடல்களை இயற்றல்.<br>• கோப்பெருஞ்சோழனின் படை தன் பாண்டிய நாட்டின் எல்லையில் இருப்பதை அறிந்து உடனே போருக்குத் தயாராகும்படி தன் படைத்தலைவனுக்கு பாண்டிய மன்னன் கட்டளை இடுதல். பிசிராந்தையாரைப் பார்க்க பிசிருக்குச் செல்லுதல்.ஆனால், அங்கே பிசிராந்தையார் அன்ன சேவலே என்ற பாடலில் சோழ அரசனின் மீது கொண்ட அன்பையும் நட்பையும் கேட்டு பாண்டிய மன்னன் மனம் மாறுதல். | 3 |
| | • கோப்பெருஞ்சோழன் புலவரின் அறவுரையில் ஆட்சியைத் துறத்தல்..வடக்கிருந்து உயிர் விட எண்ணுதல்.அப்போது தன் அமைச்சரிடமும் புலவர்களிடமும் பிசிராந்தையார் தன்னைக் காண வருவார் என்றும்,தன்னுடன் வடக்கிருப்பார் என்றும் அவருக்காக ஓர் இடத்தைத் தயார் செய்யச் சொல்லுதல்.<br>• கோப்பெருஞ்சோழன் வடக்கிருப்பதைக் கேள்விபட்ட பிசிராந்தையார் உடனே சோழ நாட்டுக்கு வருதல்.சோழனோடு வடக்கிருந்து உயிர் துறத்தல்.<br><br>முடிவுரை: துணைக்கருப்பொருள்கள் நாடக வளர்ச்சிக்கு துணைபுரிகின்ற.மேலும் நமக்கு நல்ல படிப்பினையாகவும் அமைகின்றன. | 3 |

| | | |
|---|---|---|
| | **குறிப்பு:** ஒரு சம்பவம் அல்லது இரு சம்பவங்களை விரிவாக எழுத வேண்டும்.ஒவ்வொரு கருத்துக்கும் இறுதியில் வலியுறுத்தும் வாக்கியம் எழுதிருக்க வேண்டும். | முடிவுரை 2<br>மொழி 1 |
| 14 | i) **முருகய்யாவின் பண்புநலன்கள்**<br><br>அ. எளிமையான வாழ்க்கையை விரும்புபவர்<br>ஆ. உணவுக்கட்டுப்பாடு மிகுந்தவர்<br>இ. பெண்ணுரிமைக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்<br>ஈ. குடும்பப்பற்று மிக்கவர்<br>உ. பொதுநலச்சிந்தனை கொண்டவர்<br>ஊ. கடமை தவறாதவர்<br>எ. கொள்கையில் உறுதி கொண்டவர்<br>ஏ. வஞ்சக எண்ணம் இல்லாதவர்<br>ஐ. சான்றோரைப் போற்றுபவர்<br>ஒ. அரசியலில் ஈடுபாடு இல்லாதவர்<br><br>(ஏதெனும் 3 பண்புநலன்கள்)<br>முன்னுரை/முடிவுரை தேவையில்லை<br><br>ii) **வாடாமலர் நாவலின் சமுதாயப் பின்னனி**<br>அ. பொருளியல் அடிப்படை<br>- மேல்மட்ட வர்க்கம்<br>- நடுத்தர வர்க்கம்<br>- கீழ்த்தட்டு வர்க்கம்<br><br>ஆ. சமூகவியல் அடிப்படை<br>- நட்பைப் போற்றும் சமுதாயம்<br>- மாணவர் சமுதாயம்<br>- எளிய வாழ்க்கை வாழும் சமுதாயம்<br>- ஆடம்பர வாழ்க்கையை விரும்பும் சமுதாயம்<br>- இரக்க மனப்பான்மை கொண்ட சமுதாயம்<br>- அரசியலில் ஆர்வம் கொண்ட/இலாபம் தேடும் சமுதாயம்<br><br>* மாணவர்கள் பொருளியல் அடிப்படையிலும் எழுதலாம் அல்லது சமூகவியல் அடிப்படையிலும் எழுதலாம். | 10 பு<br>(3x3 = 9<br>+1 மொழி<br><br>10 பு<br>(3x3 = 9<br>+1 மொழி |

| | | |
|---|---|---|
| 15 | **i) கனகத்தின் பண்புநலன்கள்**<br>அ. மேற்கத்திய நாகரிகத்தைப் போற்றுபவள்<br>ஆ. ஆடம்பரத்தை விரும்புபவள்<br>இ. ஆண்களிடம் நெருங்கிப் பழகுபவள்<br>ஈ. சினிமா மோகம் கொண்டவள்<br>உ. பொறுப்பற்றவள்<br>ஊ. ஒழுக்கத்தப் போற்றாதவள்<br>எ. ஆணவம் மிகுந்தவள்<br><br>(ஏதெனும் 3 பண்புநலன்களை விளக்கி எழுதி இருக்க வேண்டும்)<br>முன்னுரை/முடிவுரை தேவையில்லை. | 10 பு<br>(3x3 = 9<br>+1 மொழி |
| | **ii) வாடாமலர் நாவலின் உத்திகள்**<br><br>அ. பின்நோக்கு உத்தி<br>ஆ. உரையாடல் உத்தி<br>இ. கடித உத்தி<br>ஈ. கதைகூறல் உத்தி<br>உ. நனவோடை உத்தி<br>ஊ. முன்நோக்கு உத்தி<br>எ. உரை உத்தி<br><br>(ஏதெனும் 3 உத்திகளை விளக்கி எழுதி இருக்க வேண்டும்)<br>முன்னுரை/முடிவுரை தேவையில்லை. | 10 பு<br>(3x3 = 9<br>+1 மொழி |